ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.
ப்ரஜாபதி-ஸூ ஆனிமீ கஅஉ

# அத்வைதிகளுக்கோர் விக்ஞாபனம்.

அத்வைதசிகாமணிகளே! மிகவருத்தத்துடனும் மிகபரபரப்புடனும் இவ்விஷயத்தை உங்கள் முன்போடுகிறேன். கும்பகர்ணன் எப்போதும் தூக்கத்தைக் கேட்டுக்கொண்டபோதிலும் ஏதோ ஒரு நாள் ஆகாரத்திற்காக எழுந்திருப்பதாயும் அன்று ஸ்நாநாதி நித்ய கன்மங்களை முடித்துக்கொண்டு அண்ணாவிடம் சென்று ராஜ்பவிஷயத்தை கவனிப்பதாயும் அண்ணாவால் ஆகாத கார்யமாயிருந்தால் அதை அந்நொடியிலேயேமுடித்துக்கொடுத்து இனி யாதொரு பயமுமில்லை என்று சொல்லைக்கேட்டு சயனத்திற்குப்போவானென்றும் புராணம் கேட்டிருக்கிறோம். இக்காலத்தில் நாம்மட்டிலும் நம் மத ராஜ்யத்தில் என்ன அநீதி நடந்தபோதிலும் ஒரு காலத்திலும் எழுந்திருக்காமலும் ஆகாரமில்லாமலும் ஒரே தூக்கமாய் தூங்கும்படி எந்த பிரம்மன் வரம்கொடுத்தானோ தெரியவில்லையே. நான் போடும் கூக்குறல் காதில் விழுமோ என்னவோ. ஆனாலும் ஊதுகிற சங்கை ஊதிவிடுகிறேன், பொழுது விடியும்போது விடியட்டும் என்று சொல்வதற்கிணங்கக் கதறிவிடுகிறேன்.

ஒருகாலத்தில் மகம்மதியர்களால் நம்மதத்திற்கு சொல்லவொண்ணா இடையூறுகள் நேர்ந்தன. அவைகளை எல்லாம் விலக்கி நம் முன்னோர்கள் எப்படியோ நம்மதத்தை நம் கையில் ஒப்புவித்து காலத்தைக் கழித்துவிட்டனர். இப்போது மத்வர் நம் மத சத்துருவாய்க்கிளம்பி ஆங்காங்கு அட்டஹாஸம் செய்வதையும் ஸாமான்யர்களையும் பண்டிதர்களையும் கூட மயக்கும்படி தமிழ்

நடையில் நம் மதம் ஆபாஸமென்றும் அஸத்யமென்றும் இதனுல் பரலோகம் கிடைக்காதென்றும் நாங்கள்செய்யும் தத்வோபதேசத்தைக் கேட்டுக் கடைத்தேறுங்களென்றும் புத்தகம் போடுவதையும் பார்த்தால் कलौमध्वमहंमदौ கலியில் மத்வரும் மகம்மதியரும் நம் மத விரோதிகள் என்று எமதாசிரியர் அடிக்கடி சமயத்தில் கூறினதை வேடிக்கை வசனமோவென்றெண்ணியிருந்த எனக்கு இப்போது இது பவிஷ்யத்புராண வசனந்தானேவென்றும் பிரமிக்க நேருகிறது, ஆகவே எழுந்திருங்கள்! எம்போன்ற மந்தபுத்தியுள்ளவர்களுக்கு தைரியம் கொடுங்கள். தூக்கம் போதும். நம் ஸந்ததியினிடத்தில் நம் மதத்தை சுத்தமாகவே ஒப்புவிக்கும்படி தான் நம் முன்னோர்களின் கட்டளை. அத்வைத சபைகூட்டி நமது சாஸ்திரவாக்யார்த்தத்தை மட்டிலும் கேட்டுக்கொண்டிருக்க இடையூறு முன் நிற்கிறது. நமது மதத்தைக் காப்பாற்றுங்கள். த்வைதமென்னும் இருளை அகற்ற அத்வைதபானுவின் உதயத்தை வேண்டுகிறோம்.

எம். என். சுப்ரமண்யசாஸ்திரிகள்.

---

# அத்வைதமதமே வைதிகம்

(494 பக்கத்தொடர்ச்சி)

இந்த யாகவிசேஷமானது சியேனமென்கிற யாகம் அபிசாரம் என்னும் சஸ்திரகாதமாகிய பலத்தின் துவாராவாகச் சத்துருவின் மாரணத்திற்குக் காரணமாகித் தான் நேரில் காரணமாகாதபடியால் ஹிம்ஸாரூபமாகாததுபோல் இல்லாமல் வைரியின் மாரணத்தையே நேரில் பலமாகக்கொண்டு மாரணத்திற்கு அனுகூலமான வியாபாரம் ஹிம்ஸையென்னும் ஹிம்ஸாலக்ஷணம் பொருந்தியதால் ஹிம்ஸிக்கக் கூடாதென்னும் நிஷேதவாக்யத்திற்கு விஷயமானதுபற்றி தர்மமாகாதோவெனில் அது கூடாது. ஏனெனில் ஹிம்ஸிக்கக்கூடாது என்றும் நிஷேதமானது புருஷர்களின் ராகத்தால் பிராப்தமான ஹிம்ஸையை விஷயமாய்க்கொண்டு உபபன்னமாகுமானபடியால் அது விதிக்கப்படும் ஹிம்ஸையையும் விஷயமாகக்கொண்டு அதில் பிரவர்த்திக்காது. அப்படி பிரவர்த்

திக்குமானுல் யாகத்தில் விதிக்கப்படும் பசுஹிம்ஸையிலும் அது பிரவிருத்திக்கும்படி ஏற்படும். அப்படி பிரவிருத்திப்பது மீமாம் ஸகர்கள் ஒப்புக்கொள்ளாத விஷயம். ஈண்டு ஓர் ஆசங்கை. அதாவது சியேனயாகமானது நேரில் ஹிம்ஸாரூபமாயில்லாததால் அது ஹிம்ஸிக்கக் கூடாதென்னும் நிஷேதத்தால் நிஷேதிக்கப்படாது. அதர்மமாகாதபோனுலும் அதன் பலமாகிய அபிசாரமென்னும் ஹிம்ஸை விதிக்கப்படாமல் நிஷேதிக்கப்பட்டிருப்பதால் அதர்மமானதுபற்றி அதன் மூலமாகப் பரம்பரையால் அனர்த்தத்தைக் கொடுப்பதாகிய சியேன யாகத்தில் பாபபீருக்களாகிய சிஷ்டர்களுக்கு நிஷ்கம்பமான (நடுக்கமில்லாத) பிரவிருத்தி ஏற்படுகிறதில்லை என்பது உலகானுபவம். இப்பொழுது கூறப்படும் வைரிமாணத்தையே நேரில் பலமாகக்கொண்டு ஸ்வயமே ஹிம்ஸாரூபமான யாகவிசேஷமானது வேதத்தால் விதிக்கப்பட்டு ஹிம்ஸிக்கக் கூடாதென்னும் நிஷேதத்தால் கீழ்காட்டியபடி நிஷேதிக்கப்படாமலிருந்தால் அது நேரிலும் அதர்மமாகாது. அதன் பலமாகிய சத்துருவின் மாணம் ஹிம்ஸாரூபமாயில்லாமல் ஹிம்ஸையின் பலமானதால் ஹிம்ஸிக்கக் கூடாதென்னும் நிஷேதத்தால் நிஷேதிக்கப்படாதபடியால் அந்த சத்துருமாணமாகிய பலத்தின் மூலமாக பரம்பரையாகவும் அதர்மமாகாது. அனர்த்தத்தைக்கொடுக்காது போகுமானபடியால் இவ்வித யாகவிசேஷத்தில் பாபபீருக்களாகிய சிஷ்டர்களுக்கும் நிஷ்கம்பமான பிரவிருத்தி ஏற்படும்படி நேரிடும் என்று, இதற்கு ஸமாதானம் கூறுவாம்.

இந்த யாக விசேஷமானது ஹிம்ஸிக்கக் கூடாதென்னும் நிஷேதத்தால் நிஷேதிக்கப்படாமல் போனுலும்,

मूढग्राहेणात्मनो यत्पीडया क्रियते तपः ।
परस्योत्सादनार्थं वा तत्तामसमुदाहृतम् ॥

அவிவேகத்தால் ஏற்பட்ட துராக்ரஹத்தால் தனதுசரீரம் இந்திரியம் முதலியதைப்பீடித்து யாதொரு தபஸ் செய்யப்படுகின்றதோ அவ்விதமே இதரனை நாசம் செய்வதற்காக அபிசாரம் முதலிய யாதொரு கர்மா செய்யப்படுகின்றதோ அது தாமஸமென்று சொல்லப்படுகின்றது" என்று பகவத்கீதையின் பதினேழாவது அத்தியாயத்தில் கூறப்படும் வாக்யத்தைப் பர்யாலோசித்தால் சியேன யாகம்போல் வைரிமாணபலகமான கீழ்காட்டப்

படயாக விசேஷமும் தாமஸதர்மமென்று நிந்திக்கப்பட்டிருப்ப தால் அதனால் ஊஹிக்கப்பட்ட நிஷேத வாக்யத்தின் பலத்தால் நிஷேதிக்கப்பட்டபடியால் இது அனிஷ்டஸாதனம் என்று வேதத்தால் போதிக்கப்பட்டபடியால் அதர்மமானது பற்றி இதில் சிஷ்டர்களுக்கு நிஷ்கம்ப பிரவிருத்தி ஏற்படாதது பொருத்தமே. இந்த யாக விசேஷமானது வேதத்தால் இஷ்ட ஸாதனமென்று போதிக்கப்பட்டபடியால் தர்மமாயுமாகின்றது. அனிஷ்டஸாதனமென்று போதிக்கப்பட்டபடியால் அதர்மமாயும் ஆகின்றது. தர்மமாக மாத்திரமில்லாமல் அதர்மமாகவுமிருப்ப தால் இதில் சிஷ்டர்களுக்கு பிரவிருத்தியில்லை. ஒன்றுக்கே தர்ம மாயிருக்குந்தன்மையும் அதர்மமாயிருக்குந்தன்மையும் வருமா என்றால் வரலாம். தர்மத்தன்மையும் அதர்மத்தன்மையும் ஜாதி யன்று, அது ஜாதியின் வேறாகிய உபாதிஎன்று சாஸ்திரஜ்ஞர்க ளால் கூறப்படும் தர்மவிசேஷம். ஆகையால் இரண்டுதன்மை யும் ஒரு வஸ்துவிற்கு இருப்பதில் தோஷமில்லை. இவ்விதம் ஒரு வஸ்துவில் 2-தன்மையும் சேருவது தோஷமில்லாததால் சியேன யாகம் முதலியதைவிலக்க தர்மலக்ஷணத்தில் बलवदनिष्टाननुबन्धित्वं பிரபலமான அனிஷ்டத்தை உண்டுபண்ணாத தன்மையென்று ஓர் விசேஷணம் கொடுப்பது அனுவச்யகம். அந்த விசேஷணத் தைக் கொடுத்தாலும் அது சியேன யாகம் முதலியதை விலக்கா ததால் உபயோகமில்லை. ஏன் அது விலக்காதெனில் அனிஷ்டத் தில் பிரபலத்தன்மையென்றால் உத்கடமான துவேஷத்திற்கு விஷயமாயிருத்தலே அனிஷ்டத்தில் உத்கடமான துவேஷம் வரு வது அவரவர்களின் பிராசீனமான கர்மாவிற்கு அனுகுணமாய் ஏற்படுவதால் சியேன யாகம் முதலியதாலுண்டாகும் அனிஷ்ட பலத்தில் ஒருவனுக்குப் பிராசீன கர்மவசத்தால் உத்கடமான (அதிகமான) துவேஷம் ஒரு சமயம் வராமலிருக்கலாம். அந்த சமயத்தில் அந்த சியேனயாகமானது பலவத்தான (உத்கடமான துவேஷத்திற்கு விஷயமான) அனிஷ்டத்தை உண்டுபண்ணாத தால் அந்த விசேஷணம் சியேன யாகத்தை விலக்காததால் பிர யோஜனமில்லை. சியேன யாகத்தாலுண்டாகும் அனிஷ்டத்தில் உத்கடமான துவேஷமில்லாதவன் தானே அதில் பிரவிருத்திப் பான். அதில் அவ்வித துவேஷம் உள்ளவன் பிரவிருத்திப்பானா? ஆகையால் சியேன யாகத்தில் புருஷன் பிரவிருத்திக்கும்பொழுது

அது பலவதனிஷ்டானனுபந்திதான். ஆகையால் அந்தவிசேஷணம் கொடுத்தும் உபயோகப்படாமல் போகிறபொழுது அதைக்கொடுக்கவேண்டியது அனுவச்யகம். சியேன யாகம் தர்மமாகவே ஆகட்டும். அது அதர்மமாகிறபடியால் நமக்கு பாதகமில்லை. மேலும் சியேனம் தர்மமில்லையென்று அதை விலக்கினுல் அதைத் தாமஸ தர்மம் என்று சாஸ்திரங்களில் கூறுவது எப்படிப்பொருந்தும். ஆகையால் தர்மலக்ஷணம் அதர்மலக்ஷணம் இரண்டும் அதில் பொருந்துவதுதான் உசிதம்.

ஜைமினி ஸூத்திரத்தில் உள்ள அர்த்தபதத்திற்கும் சியேனத்தை விலக்குவது கருத்தன்று பின்னையோவெனில் அர்த்த பதத்தால் இஷ்டஸாதனமென்றும் चोदनालक्षण என்னும் பதத்தால் வேதத்தால் போதிக்கப்படுவது என்றும் தெரிவிக்கப்படுவதால் இரண்டு பதமும் சேர்ந்து வேதத்தால் இஷ்டஸாதனம் என்றுதெரிவிக்கப்படுவது தர்மம்என்று கீழ்காட்டியதர்மலக்ஷணமே கூறப்பட்டது. அர்த்தபதத்தின் ஸ்தானத்தில் அனர்த்த என்னும் பதத்தைப் போட்டால் வேதத்தால் அனிஷ்டஸாதனம் என்று தெரிவிக்கப்படுவது அதர்மமென்று அதர்மலக்ஷணமும் அர்த்தாபத்தியால் கூறப்பட்டது. சோதனு என்னும் பதத்திற்கு விதிக்கும் வாக்யமோ அல்லது விதிக்கும் வாக்யம் நிஷேதம் செய்யும்வாக்யம் என இரண்டு வாக்யங்களோ என்றுதானே அர்த்தம். அப்படியிருக்க வேதம் என்று பொதுவாய்க் கூறியது எதனுல் என்றால் வேதத்தில் இருக்கும் விதி நிஷேத வாக்யங்களாகிய சோதனையைத் தவிர இதரங்களான மந்திரம், அர்த்தவாதம், யாகம் முதலியதின் நாமதேயம், வாக்யசேஷம், விதிக்கப்படும் பதார்தங்களின் ஸாமர்த்யம், வேதத்தை அனுமானம்செய்துகொடுத்து அதன் மூலமாய் ப்ரமாணமாகும் மனு முதலியவர்களின் ஸ்மிருதி வேதம் ஸ்மிருதி இவைகளை அனுமானம் செய்துகொடுத்து அவற்றின் மூலமாய் பிரமாணமாகும். சிஷ்டாசாரம் ஆகிய चोदनादि प्रमाणाष्टक என்று சொல்லப்படும் எட்டும் தர்மாதர்ம விஷயத்தில்பிரமாணமென்று பூர்வமீமாம்ஸையின் முதலாவது பிரமாணுத்தியாயத்தில் கூறப்பட்டிருப்பதால் எல்லாவற்றையும் கிரஹிப்பதற்காகவே பொதுவாய் வேதம் என்று கூறப்பட்டது. வேதம் என்று கூறினுல் ஸ்மிருதி சிஷ்டாசாரம் இவைகள் கிரஹிக்கப்படு

மோ என்றால் ஸ்மிருதி முதலியதிலும் அதனால் அனுமானிக்கப் படும் பிரத்யக்ஷமாயில்லாத பரோக்ஷவேதமே பிரமாணமாவதால் வேதம் என்னும் பதத்தால் அவைகளும் கிரஹிக்கப்படுமென்று கண்டு கொள்க.

ஈண்டு வேதத்தால் போதிக்கப்படுவது என்ற பதத்திற்கு வேதத்திற்கு வேறான பிரமாணத்தால் ஸ்வதந்திரமாக போதிக்கப் படுவது தர்மம் என்று பொருள் கொள்ளவேண்டும். இல்லா விடில் வேதாந்தங்களாலுண்டாகும் ஆத்மதத்துவஜ்ஞானமும் ஆவ்ரணம் விக்ஷேபம் முதலிய சக்திகளோடுகூடிய ஸர்வஸம்ஸார மூலமான அஜ்ஞானத்தின் நிவிருத்தியாகிய மோக்ஷமென்னு மிஷ்டத்திற்குக் காரணமென்று வேதத்தால் போதிக்கப்படுவ தால் அதில் தர்மலக்ஷணத்திற்கு அதிவ்யாப்திதோஷம் வரும். வேதத்திற்கு வேறான பிரமாணத்தால் போதிக்கப்படாமல் என்று சொல்லும் பக்ஷத்தில் ஜ்ஞானம் அஜ்ஞானத்தையும் அதன்மூல மான பந்தத்தையும் நிவிருத்திசெய்யுமென்பது பழுதையை பழு தையென்று அறியுமறிவு. அவ்விதமறியாமையையும், அவ்வித மறியாமையாலுண்டான பாம்பென்னும் பிராந்திஜ்ஞானம் அத னாலுண்டாகும் பயம், கம்பம் முதலியவற்றையும் நிவிருத்தி செய்கின்றது என்னுமனுபவத்தாலேயே தெரியுமானதால் அந்த தோஷம் விலகும். பிரபஞ்சம் அஜ்ஞானகல்பிதம் என் பது முதலிய விஷயம் வேதத்தாலேயே அறியவேண்டியதாயி ருந்தாலும் அஜ்ஞானநிவிருத்தி ஜ்ஞானத்தால் ஏற்படுகிறதென் பது அனுபவத்தினாலேயே அறியப்பட்ட விஷயம்தானே. ஆத லால் ஆத்மஜ்ஞானத்தில் தர்மலக்ஷணத்தின் அதிவ்யாப்தி தோ ஷமில்லை. பிரபஞ்சம் அஜ்ஞானகல்பிதம் என்பது பிறகு அத்வை தம் ஒன்றே வைதிகம். அதாவது வேதத்தின் பரமதாத்பர்ய விஷயம். மற்றதெல்லாம் வைதிகமன்று அதாவது வேதத்தின் பரமதாத்பர்ய விஷயமன்று. த்வைதம் முதலியது ஸாமான்யமான மந்தாதிகாரிகளுக்காக ஏற்பட்டது என்று நிரூபிக்குமிடத்தில் விஸ்தாரமாக நிரூபிக்கப்படும். அத்வைதமே வைதிகமென்று இவ்வுபன்யாஸத்திற்குப் பெயர் வைத்துவிட்டு அதை நிரூபணம் செய்யாமல் மற்றதையெல்லாம்கூறுவது பொருந்தாதென்றுசிலரு க்குத்தோன்றலாம். அப்படித்தோன்றுவது தத்காலம்அத்வைதம்

அவைதிகம் என்று ஊரூராய்ப் பிரஸங்கம் செய்துகொண்டு வரு பவரும், அத்வைதமதத்தின் உண்மையறியாமல் அத்வைதமதத் தின் உண்மையறிந்ததுபோல் பேசிக்கொண்டு அதில் தமது சிறிய புத்திக்குத் தோன்றிய தோஷாபாஸங்களைப் பெரிய தோ ஷங்களாய்க் கூறிக்கொண்டும், ஸர்வதந்திரஸ்வதந்திராளான அப் பய்யதீக்ஷிதேந்திரர் முதலியவர்களால் மத்வமத வித்வம்ஸனம் முதலிய கிரந்தங்களில் கூறப்பட்டதும், அபரிஹார்ய தோஷங் களையுடையதும் स्वरूपव्याक्रियैव पराक्रिया என்கிற நியாயப்படி த்வைதமதத்தை அத்வைதக் கலப்பினால் ஸாரமாகத்தோன்றும். அத்வைதமததூஷணபாகம் தவிர ஸ்வபக்ஷத்திலுள்ள மோக்ஷம் பந்தம் அதன் அதிகாரிகள் முதலிய விஷயங்களோடு உபன்ய ஸிக்கச்சொல்லிக்கேட்ட மாத்திரத்தில் பாமரர் முதல் பண்டிதர் வரை எல்லோராலும் பரிஹஸிக்கப்பட்டு அதை நிராகரிக்க வேறு யத்னம் எடுத்துக் கொள்ளாமல் அதன் நிரூபணமே அதற்கு நிராகரணமாய் முடியும்படி உள்ளதும் வேதத்தை வேண்டிய மட்டும் கல்பித்துவிட்டால் த்வைதமதம் ரொம்பவும் வைதிகமாய் விடும் என்ற எண்ணத்தால் தன்னிஷ்டப்படி தனக்கு வேண்டிய வேதாத்யயனம் செய்பவர்களிடம் அகப்படாத காடாரயண சுருதி மாடாரயணசுருதி முதலியதைக் கேழ்ப்பாரில்லாததால் தாராளமாய்க் கல்பித்துக்கொண்டு வைதிக மர்யாதையையே அதிக்ரமித்து ஆனந்த தீர்த்தாசார்யரால் அத்வைதத்தில் உள்ள துவேஷமாத்திரத்தால் கல்பிக்கப்பட்டதுமான தமது த்வைதமதத் திலுள்ள அபரிமித தோஷங்களைக் காக்காய்க்குத் தன் குஞ்சு பொன்குஞ்சு என்கிற நியாயப்படி கொஞ்சங்கூட கவனிக்காமல் அவைகளைக் குணங்களாகவே பாவித்துக்கொண்டு த்வைதம் வைதிகம் நெல்லுக்குள்ளே அரிசி இருக்கின்றது என்பதுபோல் உள்ள அர்த்தமே வேதத்துக்கு உள்ளது என்று சொல்லிக் கொண்டும், பெயர் பொன்னம்மாள் என்று கழுத்தில் அணிந் திருப்பது கருகமணி என்பதுபோல் பொய்யான வாதத்திற்குதத் துவவாதம் என்றுபெயர் வைத்துக்கொண்டுக்ரைஸ்தவப்பாதிரி மாரைப்போல் தத்துவோபதேசம் பண்ணுபவருமான சில த்வை தாசார்யாது கர்ணாருந்துதமான அத்வைத தூஷணப்பிரஸங்கத் தால் புண்பட்டதால் இப்பவே அது வைதிகம் மற்றது அவைதிகம் என்று அறியவேண்டும் என்னும் ஊக்கத்தால் உசிதமே. ஆயி

னும் அத்வைதமே வைதிகம் மற்றது அவைதிகம் என்னும் அவச்யம் அறியவேண்டிய உண்மை மனதில் பிறரால் அசைக்க முடியாது. வேறான வேண்டுமானால் அதற்கு வேண்டிய பூர்வபீடிகையாயுள்ள பல விஷயம் படிப்படியாய்ச் சொல்லவேண்யது அவச்யமாயிருத்தலால் இங்கு மற்ற விஷயங்களும் நிருபிக்கும்படி நேர்ந்தது என்பதைத் தெரிவித்துக்கொண்டு பிரகிருதத்தில் உள்ளதைக் கூறுகின்றேன்.

பிரகிருதமாவது ஆத்மதத்துவக்ஞானம் தர்மத்திற்கு வேறானது என்று வைத்து அதில் தர்மலக்ஷணத்திற்கு அதிவ்யாப்தி தோஷம் வாமலிருப்பதற்காக வேதத்தால் போதிக்கப்படுவது என்பதற்கு வேதாதிரிக்தப் பிரமாணத்தாலறியப்படாது வேதத்தில் அறியப்படுவது என்று பொருள் கூறினோம்.

इज्याचारदमाऽहिंसादानस्वाध्याय कर्मणाम् ।

உண்மையில்,

अयं तु परमोधर्मो यद्योगेनात्म दर्शनम् ॥

யாகம் ஆசாரம் தபம் அஹிம்ஸை தானம் ஸ்வாத்யாயம் என்று கர்மங்களுக்குள் சித்தத்தின் பாஹ்யவிருத்தியை நிரோதம் செய்வதாகிய யோகத்தால் யாதொரு ஆத்மதர்சனமுண்டாகிறதோ இதுவே பெரிய தர்மம் என்னும் யாக்ஞவல்க்ய ஸ்மிருதியில் ஆத்மக்ஞானத்திலும் தர்மசப்த பிரயோகமிருப்பதால் அதுவும் தர்மமே ஆனதால் அதில் தர்மலக்ஷணத்திற்கு அதிவ்யாப்தி தோஷம் கிடையாது. அது லக்ஷ்யமானதால் அதில் லக்ஷணஸமன்வயம் இஷ்டந்தானே. அதனால்தான் ஜ்ஞானம் முதலியதை நிவிருத்தி தர்மமென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. பகவத்கீதாபாஷ்யத்தின் உபோத்காதத்திலும்,

"सभगवान् सृष्ट्वेदं जगत् तस्य च स्थितिंचिकीर्षुर्मरीच्यादीनग्रेसृष्ट्वा प्रजापतीन् प्रवृत्तिलक्षणं धर्मंग्राहयामासवेदोक्तम् । ततोऽन्यांश्च सनकसनन्दनादीनुत्पाद्यानिवृत्तिलक्षणं धर्मं ज्ञानवैराग्यलक्षणं ग्राहयामास । द्विविधो हि वेदोक्तधर्मः प्रवृत्तिलक्षणोनिवृत्तिलक्षणश्च"

அந்த பகவான் இந்த ஜகத்தை ஸிருஷ்டித்து அதற்கு ஸித்தியையும் செய்யவிரும்பினவராய் முதலில் மரீசி முதலிய பிரஜாபதிகளை ஸிருஷ்டித்து பிரவிருத்திரூபமாகிய வேதோக்தமான தர்மத்தை

அவர்களை கிரஹிக்கும்படி செய்தார். பிறகு ஸனகர் ஸனந்தனர் முதலிய வேறு சிலர்களையும் ஸிருஷ்டித்து ஜ்ஞானம் வைராக்யம் முதலிய நிவிருத்தி ரூபமான தர்மத்தை அவர்களை கிரஹிக்கும் படி செய்தார். வேதத்தில் சொல்லிய தர்மம் பிரவிருத்திரூபம் என்றும் நிவிருத்திரூபமென்றும் இரண்டுவிதமல்லவா என்று பூஜ்யபாத பகவத்பாதாளும் அவ்விதமே அருளியிருக்கின்றார்கள். ஆத்மஜ்ஞானம் தர்மமானபோதிலும் வேதாந்தங்களில் பிரதிபாதிக்கப்படும் பிரும்மம் என்னும் வஸ்துவானது தர்மமாகாததால் அதை போதிக்கும் பிரும்மமீமாம்ஸை என்னும் சாஸ்திரமானது தர்மத்தை போதிக்கும் தர்மமீமாம்ஸையாகிய பூர்வமீமாம்ஸா சாஸ்திரத்தைக் காட்டிலும் வேறான சாஸ்திரம் ஆவதற்குப்பாதகமில்லை. ஈண்டு ஓர் ஆசங்கை அதாவது,

एषह्येव साधुकर्मकारयतितं यमेभ्योलोकेभ्य उन्निनीषते ।

எவனை இந்த லோகங்களைக்காட்டிலும் உன்னதமான ஸ்தானத்தை அடைவிக்க விரும்புகிறாரோ அவனை இந்த பரமாத்மாவே நல்ல கர்மாவைச் செய்விக்கின்றார் என்பது முதலிய சுருதிகளாலும் पलमतउपपत्तेः என்பது முதலிய ஸூத்ரங்களாலும் பிரும்மமே இஷ்டபலஸாதனமென்று போதிக்கப்படுவதால் அதில் தர்மலக்ஷணத்திற்கு அதிவ்யாப்தி தோஷம்வருகிறதே என்று. அதற்கு இது ஸமாதானம். அதாவது

वेदवोधितश्रेयस्त्वावच्छिन्नसाधनताकत्वम् ।

வேதத்தால் சிரேயஸ்ஸூக்குமாத்திரம் ஸாதனமாகப் போதிக்கப்படுந்தன்மை தர்மலக்ஷணம். பிரும்மமானது

एषउएवासाधुकर्मकारयतितं यमधोनिनीषते ।

எவனை இந்த லோகங்களிலிருந்து கீழே தள்ள விரும்புகிறாரோ அவனை இந்த பரமாத்மாவே கெட்ட கர்மாவைச் செய்விக்கின்றார் என்பது முதலியது சுருதிகளாலும் பிரும்மமே ஸர்வஜகத்காரணம் என்று கூறும் சுருதிகளாலும் பிரும்மம் அனிஷ்டஸாதனம் என்றும் போதிக்கப்படுவதால் அதில் இஷ்டத்திற்குமாத்திரம் ஸாதனமாக போதிக்கப்படுந்தன்மை இல்லாததால் தர்மலக்ஷணத்திற்கு அதில் அதிவ்யாப்த்தி தோஷம் கிடையாது. அல்லது தர்ம்மலக்ஷணத்தில் पुरुषकृतिव्याप्यत्वं புருஷனுடைய கிருதிக்கு

விஷயமாயிருத்தல் அதாவது புருஷனுல் செய்யப்படுந்தன்மை என்றும் விசேஷணத்தைப் போட்டுக்கொண்டால் பிரும்மம் செய்யப்படாததால் அதில் அதிவ்யாப்தி கிடையாது. யாகம் முதலியது செய்யப்படுவதால் குணம் திரவ்யம் முதலியதும் கிரியையின் ஸம்பந்தத்தால் செய்யப்படுவதால் அதில் தர்மலக்ஷணம் பொருந்தும்.

(தொடரும்)

போலகம், ராமாசாஸ்திரிகள்.

---

# அத்வைத ஸபை.

இப்பெயர்கொண்ட ஸபை அத்வைதத்தையும் நம் வைதிக மதங்களையுமே பிரகாசிக்கச் செய்யவென்று 36-வருடங்களுக்கு முன் அக்காலத்திலிருந்த பிரம்மஸ்ரீ மகாமகோபாத்தியாய மஹாீயர்களான தியாகராஜ சாஸ்திரிகளென்ற ராஜு சாஸ்திரிகளவர்களையும் லௌகிக ஆஸ்திகப் பிரபுக்களான திவான் சேஷாசாஸ்திரிகள் ப்ரொபஸர் கெ. சுந்தரராமய்யர் அவர்கள் முதலியவர்களையும் முன் வைத்து அப்போது விஜயம் செய்துகொண்டிருந்த காஞ்சீ காமகோடிபீடாதிபதிகள் ஆக்ஞைப்பின்பேரில் கும்பகோணத்தில் விளங்கும் ஸ்ரீமடத்திலேயே ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் நம் வேதாந்தம் கற்ற பண்டிதர்களென்பது மிகவும் குறைந்த எண்ணிக்கையிலிருந்தது. பிறகு பிரம்மஸ்ரீ பைங்காநாடு கணபதி சாஸ்திரிகளவர்கள் அச்சபையை மிக முன்னுக்குக் கொண்டுவர எண்ணி இதற்கு மூலதனம் திறட்டவேண்டுமென்று ஆங்காங்கு சென்று வெகு பாடுபட்டு ஏதோ பணத்தையும் சேர்த்ததுமன்றி வியாகரணம் தர்க்கம் நாடகம் அலங்காரமென்று பல வருடங்கள் கற்று அத்தோடு படிப்பை நிறுத்தி விருத்திக்குப் பாடுபட்டுக் கொண்டு வையாகரணன் தார்க்கிகன் ஆலங்காரிகனென்று பெயர் வாங்குவதோடு நின்றிருந்த நம்மவர்களுக்கு ஆத்மசாஸ்திரமான அத்வைத வேதாந்தத்தை விசேஷமாய் கற்கும்படி செய்வதில் முதற்காரணராய் நின்று பாடப்ரவசனத்தாலும் இச்சபையை வளர்த்து வந்தார்கள். இதனால் பிறகு வரவர இச்சபைக்கு பரீக்ஷைகொடுக்க பண்டிதர்கள் அதிகரித்தனர். இச்சபையின்

மூலமே ஆசாரியாளின் மஹிமையும் அவர்களது மூன்றாத்தினங்களான ஸூத்ரபாஷ்யம் உபநிஷத்பாஷ்யம் கீதாபாஷ்யமும் பிரகரணக் கிரந்தங்களும் உல்லாஸமாய் வெளியில் உலாவ ஆரம்பித்ததென்றும் சொல்வது மிகவும் பொருந்தும். மிக உன்னத நோக்கமுள்ள இச்சபை நாளொரு மேனியும் பொழுதொருவண்ணமென்று சொல்வதற்கு ஏற்க இவ்வருஷம் மிகச் சிறப்பாய் நடந்தது. இவ்வருடம் முந்திய வருடத்தைக்காட்டிலும் ஓங்கி வளர்ந்ததென்று புகழும்படி 36-வருடங்களைக் கடந்து திவ்ய யௌவனத்தோடு பிரகாசிக்கிறது. இச்சபைக்கு ஒருவாறு தேவையான மூலதனம் ஏற்பட்டிருந்தால் இதன் பயனை இவ்விந்தியாவிலுள்ள அத்வைத மதத்திற் பிறந்த யாவருமல்ல. மற்ற நம் வைதிக மதஸ்களும் வேறுமதத்தவர்களும் அன்யதேசத்தாரும் கூட இச்சபையை தலைதூக்கிச் சிலாகித்துக் கொண்டாடியிருப்பார்கள். அவ்விதம் நம் இந்தியாவில் மூலதனம் கொடுப்பதற்கு மனிதர்களில்லை என்பதற்கில்லை. ஏராளமான அத்வைதிகள் இருக்கின்றனர். தலைக்கு 1-ரூ கொடுப்பதென்று ஒவ்வொரு அத்வைதியும் முயன்றால் எத்துனைபோ கோடிப்பணம் சேர்ந்துவிடும். விதவா விவாஹத்திற்கும் ஆங்கிலக்கல்விக்கும் நம் வேத விருத்தமான கூட்டத்திற்கும் நம்மவர்கள் ஏராளமாய் பொருளுதவி புரிகின்றனர். இத்தகைய காலத்திலும் ஏதோ ஓர் புண்யாத்மா நம்இச்சபைக்கு லக்ஷம் ரூபாய்க்கு தக்க பொருளுதவி செய்திருப்பதாயும் அப்பணத்தின் ஸ்வாதந்த்ரியம் பூராவாய் இச்சபைக்கு இன்னும் கிட்டவில்லையென்றும் கேழ்வைப்படுகிறேன். இது உண்மையாய் இருந்து பணமும் கிடைத்துவிட்டால் இனி நம் சபை தன்னுடைய யௌவன பராக்ரமத்தை அதிசீக்கிரத்தில் பிரகாசிக்கச்செய்வதுடன் நித்யயௌவனத்தை அடைந்து नजरानमृत्युः கிழத்தனமும் இல்லை சாவும் இல்லையென்று அமரஸபையாய் ஆய்விடுமென்பதில் யாது தடை. அத்தர்மாத்மாவின் புத்தியை அதிசீக்கிரமாய் ஸபலமாய் செய்யவேண்டுமென்று நாம் எல்லோரும் ஸர்வேசுவரனையும் பிருமவித்யாதிபதியான ஹைமவதியையும் அனுதினம் சிந்தித்துத் துதிப்போம்.

இனி பிரகிருதத்தைத் தொடர்வாம். இம்மஹாஸபைதன் 36-வது ஆண்டை முடித்துக்கொண்டு 37-வது வயதில் தஞ்சைஜில்லா நன்னிலம் தாலூகா முடிகொண்டான் கிராமத்திலுள்ள ஆஸ்

திகப் பிராமண மகாஜனங்களால் பிரார்த்திக்கப் பெற்ற அந்தக் கிராமத்தில் உல்லாஸமாய் விஜயம் செய்தது சுமார் 15-வருடங்களுக்கு முன் இம்மகாஸபை மதுரைக்கு விஜயம் செய்தகாலத்தில் நான் நெருங்கி ஸேவிக்க நேர்ந்தது. அதன் பிறகு ஸந்தர்ப்பம் கிடைக்காமல் பாக்யவசத்தால் இவ்வருடம் தரிசிக்க நேர்ந்தது.

அக்காலத்தில் மதுரையில் தரிசித்தபோது பரிமிதர்களாய் தான் பண்டிதர்கள் வந்திருந்தனர். அப்போது பரீக்ஷாக்கிரமத்தை நான் பார்த்தபோது நானும் பரீக்ஷை கொடுப்பதாய் ஏற்றிருக்கலாமே என்று அனுதாபப்பட்டேன். அத்தகைய இச்சபையை இப்போது தரிசித்தும் என்போன்றவர்கள் இச்சபையை தரிசிக்கலாமே தவிர பரீக்ஷைக்கு முன் வரக்கூடாதென்று தோன்றியது. இதன் காரணத்தை விரித்துரைக்கின்றேன்.

அக்காலத்தில் பரீக்ஷைக்கு வருவதற்கு அதிகமாய் முன் வராததால் வந்தவர்களை மேன்மேலும் படிக்கும்படி செய்ய உத்ஸாகம் ஊட்டவேண்டும் என்று கொண்டு மிக ஸாமான்யமாய்க் கேழ்விகேட்பதும் சொல்வதற்கு ஸங்கோசப்பட்டு அறைகுறையாய் கூறினும் நன்றாய் சொல்கிறானென்று உத்ஸாகப்படுத்தி ஸன்மானத்திற்கு அர்கனாய்ச் செய்வதாயுமிருந்தது. இப்போது வித்யார்த்திகள் அதிகமாய் வருவதால் சரியானபடி கேழ்வி கேழ்பதற்கு பதில் கூறவேண்டுமானால் படித்தக்கிரந்தத்தில் பிரௌட ஞானமில்லாதவனால் முன்வர முடியாமலிருக்கிறது.

இதனால் பிரதிவருடமும் பரீக்ஷை கொடுக்கிறவர்களின் தொகை அதிகமாய்க்கொண்டிருக்கிறதென்பதைத் தெரிந்து கொள்ளலாம். ஒருவருடம் பரீக்ஷை கொடுத்தாய்விட்டால் அவர்களுக்கு ஏற்பட்ட ஸம்பாவனையை பிரதிவருடமும் ஸபை நடக்கும்போது வந்திருந்து பெற்றுக்கொள்ளலாம். அவர்களுக்கு மறுபடி பரீக்ஷை கிடையாது. ஆனால் மேல் கிரந்தம் படித்துவந்தால் அதற்காக பரீக்ஷை கொடுக்கவேண்டும். பிரதிவருஷமும் வந்தபோதிலும் படித்த சாஸ்திரங்கள் மறவாமலிருப்பதற்காக அவர்களை சாஸ்திர விஷயமான உபன்யாசங்களையும் வாக்யார்த்தங்களையும் செய்யச் சொல்லுகின்றனர். இச்சபைக்கு பரீக்ஷாதிகாரிகளாய் நான்கு ரத்தினங்கள் அத்திவ்ய ரத்னங்கள் பிரிந்து நான்கு திக்குகளின் அதிபதிகள் போல வீற்றிருந்தனர். ஒவ்வொருவர்

கையிலும் ஒவ்வொரு நோட்டுப்புஸ்தகமும் எழுதுகோலுமிருக்கிறது. பரீக்ஷைக்கு வருகிறவர்கள் நடுவில் உட்காரவேண்டும். ஒரு கேள்வியை ஒருவர் கேட்டவுடன் பதிற் கூறும்போது நால்வரும் அதில் அவாந்தரக் கேள்வி கேட்டுப்பிறகு அது போதும் என்று நினைத்தால் நிறுத்தச்சொல்லி வேறு கேள்வி கேட்டு முன் அந்தக்கேள்விக்கு அவர் சொன்னபதிலின் யோக்யதைக்குத்தக்க படி நால்வரும் தனித்தனியே மார்க்கு குறித்துக்கொள்கின்றனர். இவ்விதமாய் யாவரையும் கேட்டபிறகு இவர்கள் தனித்தனி குறித்த மார்க்கு புஸ்தகங்களை அதற்கேற்பட்ட லௌகிகர்களும் கலந்து ஆலோசித்து இன்ன ஸன்மானத்திற்கு அர்ஹனென்று தீர்மானிக்கின்றனர். இதனால் இம்மகாஸபையின் மகிமையை நன்கு அறிந்துகொள்ளலாம். இந்து அந்தரத்னங்களென்றுசொன்னதால் பெயர்தெரியாதவரை ஆவலடங்காது. அவர்கள்பிரும்மஸ்ரீ யக்ஞ ஸ்வாமிசாஸ்திரிகள்அவர்கள், 2. பிரும்மஸ்ரீ கருங்குளம்கிருஷ்ண சாஸ்திரிகள் அவர்கள், 3. பிரும்மஸ்ரீ திருவாதி விசுவநாதசாஸ்திரிகள் அவர்கள், 4. பிரும்மஸ்ரீ ராமச்சந்திரதீக்ஷிதாவர்கள் இவர்களின்சாஸ்திரக்ஞானம் அபாரமென்பதை ஆஸ்திகர்கள் அறிவார்கள்.

இம்மகாசபையின் முக்கியப்பிரயோஜனம் இது. காலஸ்வபாவத்தால் ஆஸ்திக்யத்தை விட்டகன்று மேனாட்டு நாக்ரீகாவேசம் கொண்டு தன் தகப்பன் பாட்டன் சொன்னவழி மோசமென்று சாஸ்திரத்திலும் ஆசாரத்திலும் விரோதபாவம் காட்டி கர்ஜித்துக் கொண்டு திரியும் இக்காலத்தில் சாஸ்திரத்தின் உண்மையை வெளியிட்டு அவனவன் மனதை ஸாவதானத்துடன் திருப்பி ஆஸ்திக்யத்தில் மீண்டும் பதியவைக்க பண்டிதர்கள் உண்டோவென்று ஸந்தேகம் கொள்ளும் ஆஸ்திகர்கட்கு அபயப்ரதானம் செய்து பிரதிவருடமும் மதப்போரில் முன் அணி நின்று வீராட்டஹாஸம் செய்யும் பண்டித சிங்கங்களைக் கிளப்பிக்கொண்டிருக்கிறது. அநுபவ ரசிகரான பர்த்ருஹரி என்பவர் உலகிலுள்ள வைதிகர்களையும் லௌகிகர்களையும் மிக நொந்தமனதுடன் திட்டினார். அதாவது பண்டிதர்களைப்பார்த்து बोद्धारो मत्सरग्रस्ताः படித்தவர்கள் பொறாமை கொண்டவர்களென்றார். அதாவது தனக்குத் தெரிந்ததை பிறருக்குஎடுத்துக்கூறுவதில்லை. பிறர் கூறினும் அதை அநுவதிக்காமல் அது தப்பு தவறு என்று குறை கூறுவர் என்றார். நாங்கள் அப்படியல்லவென்றும் நாங்கள் யாவருக்கும் ஹிதம்

உமைப்போமென்றும் எங்களிடத்தில் பொறுமை கிடையாது என்றும் பர்த்ருஹரி கூறிய முதல் பாதத்திலுள்ள அபகீர்த்தியை விலக்க நாங்கள் முன் வந்துவிட்டோமென்று இம்மகாசபையின் மேடையில் பண்டிதர்கள் கர்ஜிக்கின்றனர். இனி இரண்டாம் பாதத்தின் குற்றத்தை விலக்கிக்கொள்ள ஆஸ்திகப் பிரபுக்கள் தான் முன்வரவேண்டும். பிரபுக்கள் பண்டிதர்களை லக்ஷ்யம் செய்து தன் கர்வத்தை தொலைத்துவிட்டால் சுலோகத்தின் 3-வது 4-வது பாதம் ஆடிக்காற்றுப் பஞ்சின் கதியடையும் அப்போது உலகம் பர்த்ருஹரியின் ஸந்தோஷத்திற்கு காரணம் ஆய்விடும். அவ்விதம் ஆகுமென்பதை காட்டவே பிரபுக்களும் பரமபக்தியுடன் ஒன்று கூடி இச்சபையைத்தாங்கள் கிராமத்திற்கே அழைக்க ஆரம்பித்துவிட்டனர். இவ்விதம் வருடந்தோறும் ஒவ்வொரு கிராமத்தாரும் அழைத்தால் அதிசீக்கிரத்தில் நம் ஸந்ததி குழந்தைகளும் படிப்படியாய் ஆஸ்திக்யத்தை பின் பற்றி நடப்பார்கள். இதற்கு நான் கண்ட ஒருவிஷயத்தைக்கூறி இவ்விஷயத்தைமுடித்துக்கொள்ளுகிறேன்.

இவ்வருடம் ஸபையில் பரீக்ஷை கொடுக்கவந்தவர்களில்சிலர் பிரபுக்களெனத்தோன்றியது. விசாரித்ததில் அவர்கள் லக்ஷப்பிரபுக்களென்றும் ஸன்மானத்திற்கு வந்தவர்களல்லவென்றும் கேட்டறிந்தேன். அவர்கள் தகுந்தபடி பரீக்ஷைக்கொடுத்ததையும் அவர்களின் ஸ்னானம் நித்தியகன்மம் செய்தல் முதலிய ஆசாரத்தையும் வினயஸம்பத்தையும் பார்க்க மிக ஆனந்தமாய் இருந்தது இவ்விதம் கிராமம் தோறும் இச்சபை விஜயம் செய்தாலே போதும். நம் உலகிலுள்ள நாஸ்திகர்களும் சொல்லாமல் ஓடுவார்கள் நம் குழந்தைகள் ஆர்யஸமாஜமென்னும் பிர்மஸமாஜமென்றும் தேசீய ஸபையென்றும் ஜாதிவர்ணாச்ரமமின்றி யாவரையும் பெரியாரென்றும் ஓடுவதைத் தன்னாலேயே நிறுத்திவிடுவார்கள். தேசத்தில் வர்ணாச்ரமதர்மம் தழைத்தோங்கும். உண்மையான ஸகோதரபாவம் தோன்றும். ஸ்வாராஜ்யம் அப்போதேகிட்டும். ஈசன் அருள் புரிவார்.

இன்னொன்று நாம் நமக்கு எதிரியாய் கிளப்புவோரை எதிர்த்து நின்றும் நம்வர்ணாச்ரம தர்மத்தைப் பரவச்செய்ய ஆவல்கொண்டு ஆங்காங்கு சென்று உபன்யாஸ மூலம் வர்ணாச்ரம தர்மத்தை நிலைபெறச் செய்யவேண்டும். கூடியமட்டிலும் தர்மசாஸ்திரங்

களுக்கு விரோதமாய் நடப்பவர்களை ஸபைமூலம் நயபயத்தால் நல்வழி திருப்பவேண்டும் என்று ஆலோசிப்பதற்கு அனுகுணமாய் இம்மகாஸபையில் தர்மசாஸ்திர பரீக்ஷையும் வைத்திருந்தார்கள். இப்போது இச்சபையில் அப்பரீக்ஷை இல்லையென்று அறிகிறேன். இப்படியிருப்பது நமக்கு ப்ரக்ருத ப்ரயோஜனத்திற்கு போதாதென்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். மற்றொன்று.

நம் அத்வைதிகள் கேவலம் சாஸ்திரவிசாரம் செய்வதோடுநின்றால்போதாது. நம்முள் அவாந்தரகலகம் முற்றுகிறது. த்வைதாசாரியார் வீண்போர் செய்ய முன்னில் ஆடுகிறார். ஆபாஸமான புத்தகங்களை ஏராளமான பணச்செலவினால் வெளியிடுகிறார். அப்புத்தகங்களை எழுதாமல் அவர் ஆரவாரத்தை ஒடுக்க லௌகிகரீதியில் வழிதேடாதவரை மிகக்கேவல நிலைமைக்கு வருமென்பதை யாவரும் அறிந்து கார்யம் செய்யவேண்டும். இதைப்பற்றி விரிவாய் அடுத்து எழுதுகிறேன்.

எம். என். சுப்ரமண்யசாஸ்திரிகள்.

---

# 34-வது தமிழ்மாகாண மஹாநாடு.

இப்பெரிய தலையங்கத்துடன் 5—6—31 வெள்ளிக்கிழமை சுதேசமித்திரனில் மதுரையில் நடந்த மகாநாட்டின் விஷயம் வரையப்பட்டிருக்கிறது. அம்மகாநாட்டிற்கு அக்கிராஸனாராய் ஸ்ரீமான் ஸத்தியமூர்த்தி அய்யரவர்கள் இருந்தனராம். மகாநாட்டின் முக்கியநோக்கத்தைப் பொதுவாய்ப் பார்த்தால் நம் இந்தியாநாடு செழித்தோங்கவேண்டுமென்பதும் நமக்கு ஸ்வராஜ்யம் உடனே நமதிஷ்டப்படி கொடுக்கவேண்டுமென்பதும்தான் இவ்விஷயத்தில் இந்தியாவிலுள்ள யாவருக்கும் அபிப்பிராய பேதம் நேராது. அது விஷயமாய் சின்னாட்களுக்குமுன் காந்தி இர்வின் ஸம்பாஷணையில் சில ஒப்பந்தங்களுமேற்பட்டிருக்கிறது. இதற்காக மறுமுறை ஓர் சபை லண்டனில் நடக்கப்போவதாயும் அதற்கு இந்தியப் பிரதிநிதியாய் காந்தி ஒருவரேபோனாற்போதுமென்றும் பல சபையார்கள் கூறி தீர்மானித்துவிட்டனர். அதுவும் வருகிற செப்டம்பரில் நடக்குமென்று கூறுகின்றனர்,

நாம் கோரும்கோரிக்கைகளைப் பூர்த்திசெய்வதாயும் அரசாங்கத்தார் வாக்குறுதிகொடுத்திருக்கின்றனரென்றும் பிரஸித்தம். இது யாவருக்கும் ஸந்தோஷமேயாயினும் சிலவிஷயங்களை இவ்விஷயத்தில் ஆலோசிக்கவேண்டி இதில் இறங்குகிறோம்.

நமக்குவரும் ஸ்வராஜ்யத்தில் ஸந்தோஷமாய் அனுபவிப்பவர்கள் யார்? இந்தியர்கள், மகமதியர்கள், கிறிஸ்துவர்கள் மற்றுமுள்ள எத்தனை மதஸ்தர்களாயினும் அவரவர்கள் இஷ்டப்படி அனுபவிப்பதென்றால் நம்மைத்தவிர மற்ற மதஸ்தர்கள் மதத்தையே உயிரைக்காட்டிலும் மேலாய் நினைத்திருப்பதால் தங்கள் மதத்திற்கு யாதொரு தடையும் முதலில் வரக்கூடாதென்று ஒற்றுமையுடன் தீர்மானம்செய்துகொண்டு ஸ்வராஜ்ய சுகத்தை அனுபவிப்பார்கள். இந்துக்கள் என்றால் நம்முக்குட்பல பிரிவுகளிருக்கின்றன. ஒன்றுக்கொன்று விரோதமுன்ளவைகளாயும் இருக்கின்றன. ஒருசாரார் வேதம் தர்மசாஸ்திரம் புராணம் முதலிய யாவும் பிராமண கிரந்தங்கள்தான் ரிஷிகள் ஈசுவராம்சம் பெற்ற அவதார மூர்த்திகள் அவர்கள் அனுஷ்டித்த வர்ணாச்ரம தர்மம் அனுஸரிக்கத்தக்கது என்கின்றனர் இன்னொருவர் வேதத்தில்சிலபாகம் உண்மையானது பலபாகம்கட்டுறை யாவரும் வேதம் கற்கலாம் புராணங்கள் தர்மசாஸ்திரங்கள் நம்பத்தக்கவையல்ல. எங்குசென்றாலும் தோஷமில்லை. வர்ணாச்ரமம் அவ்வளவாகவேண்டுவதில்லை என்கின்றனர். மற்றுமொருவர் வேதத்தில் சில உபனிஷத்துக்கள் நம்பத்தக்கவை வர்ணாச்ரமம் கிடையாது பூணூல் தரிக்கவேண்டாம். எந்த ஸ்திரீயை வேண்டுமானாலும் விவாகம் செய்துகொண்டு மனம்போனபோக்குப்படி எல்லாமிருக்கலாம் என்கின்றனர். இவைகளுள் 2-ம் 3-ம் நம் இஷ்டப்படி நடக்க இடம்கொடுப்பதால் அதுதான் சௌகர்யமென்று வடதேசத்தில் பணப்பெருத்த பிரபுக்கள் தழுவிவிட்டனர். முதல் சொன்னவர்கள் சாதுக்களாய் உலகம் தெரியாமல் உறங்கிவிட்டனர். கீழ்க்கூறப்பெற்ற இருவர்களும் இந்துக்களென்றே கோஷ்டியில் முன்வந்துகொண்டுதான் தற்காலம் நம் மதத்தை ராஜஸபையில் இழுத்துவிட்டு அலங்கோலப்படுத்துகின்றனர். இவர்கள் தேசமுன்னேற்றத்திற்கு பாடுபட்டு காங்கிரஸ் தலைவர்களாயும் விளங்குகின்றனர். பல வழிகளாலும் செல்வாக்குள்ள

இவர்கள் உலகம் முழுமையையும் நியூஸ்பேபர் மூலம் அளந்து கொண்டு உலகம் நம் கீழ் நிற்கிறதென்றும் அறிந்துகொண்டனர். அதற்கேற்க காங்கிரஸ் மேடைகளிலேறி தீண்டாமை விலக்கல் ஜாதிவர்ணாச்ரமதொழித்தல் பிராசீனவிவாக தர்மத்தைமாற்றல் ஸ்திரீகளுக்கு ஸ்வதந்திரமளித்தல், முதலிய நம்மதக்கெடுதல்களை அனுஷ்டிக்க கர்ஜிக்கின்றனர். அவைகளை ஆங்கிலம் கற்ற நம் மவர்கள் யாவருமேற்கின்றனர். இது நியாயமில்லை என்று நினைக்கும்நம்வைதிகர்கள் அச்சபையை அணுகுவதேபாபமென்று தூரத்திலிருக்கின்றனர். அல்லது ஸபையிற் புகினும் இவர் பேச்சை அனுவதிக்க ஒருவரும் தலைத்தூக்கமாட்டார் தூக்கினும் இவ்விரண்டு பேரோடு நின்றுவிடும். அதனால் அவர்களுக்குத் தான் மகிமை அதிகரிக்கும். 100-க்கு ஒன்று என்று கூட ஆகாமல் நம் அபிப்பிராயம் புரக்கணிக்கப் பெறும் மெஜாரட்டிபலம் பூரணமாய்பெற்ற இத்தலைவர்கள் எதைக் கூறுகின்றனரோ அதையே எல்லோரும் ஊர்ஊராய்க் கூறுகின்றனர். கதர் அணியுங்கள் காந்தியின் ஆக்ஞை ஜாதிவர்ணாசிரமத்தை ஒழியுங்கள். காந்தியின் ஆக்ஞை தீண்டாமையை அகற்றுங்கள். காந்தியின் ஆக்ஞை கள்ளுக்கடை மரியுங்கள். ஸ்திரீதொண்டர்கள் முன்வர வேண்டும். காந்தியின் ஆக்ஞை என்றெல்லாம் கர்ஜிக்கின்றனர். இதற்குக் காரணம் கேட்டால் மகாத்மாவின் ஆணை என்ற ஒன்று தான் பதில் வேறு யாதொன்றையும் எதிர்பார்க்க முடியாது. இதற்கிணங்கவே மதுரை ஸபையும் நடந்ததென்பதைக் கூறத்தான் இங்கு வந்தேன்.

அச்சபையின் வரவேற்புக் கமிட்டியின் தலைவராய் ஸ்ரீமான் ஆர். சுப்பிரமணியன் என்பவர் ஏற்பட்டனராம். அவர் ஸௌராஷ்டிர மாபினராம். அவர் செய்த சொற்பொழிவில் பல விஷயங்களை வகுத்துக் கூறியதில் ஜாதிவேற்றுமை என்று ஒன்று பேசி இருக்கிறார். அதில் எடுத்தும் நம் நாட்டில் அதர்மமான ஜாதி மத வித்யாசங்களிலிருந்து வருவது நம் துர்பாக்யமாகும் என்கிறார். இவர் முதலில் பேச ஆரம்பித்தும் பாண்டிய நாட்டின் பெருமையையும் வளர்த்துக் கூறியதில் அதர்மமான ஜாதிமத வித்யாஸங்களிருந்ததா இல்லையாவென்ற அத்தியாயத்தை மட்டிலும் ஆராயாமல் விட்டாரோ அல்லது அப்போதும் இல்லையென்பதைக் கொண்டுதான் அனர்த்தம் எனக்கூறினரோ தெரியவில்லை

ஒன்றுமட்டிலும் நாம் இங்கு கேட்கலாம். ஜாதிமத வித்யாஸம் அனர்த்தமென்று மனமாற மேடைமீதேறிப் புகுந்த இவருக்கு இது உண்மையான எண்ணமெனில்சௌராஷ்டிரர்கள் பிராமணர் களென்று ஸென்ஸஸ் கணக்கில் தாக்கல்செய்யவேண்டுமென்றும் ஸௌராஷ்டிரர்களை பிராமண கோஷ்டியென்று எண்ணுமல் அப் பிராமண கோஷ்டியில் சேர்த்தாரென்று ஓர் வெள்ளைக் காரப்பிரபு வைச் சிறி அதட்டி அவ்வசனத்தை திருப்பி வாங்க வேண்டும் என்றும் அவரது வகுப்பினர் பாடுபட்டதை இவர் ஏற்கமாட்டா ரென்றும் நினைக்கிறேன். பிறகு சமூகச் சீர்த்திருத்தமும் கட்டுப் பாடும் அவசியமென்கிறுர். சமூகமென்றுல் என்ன ? ஜாதி என் றில்லாமல் சமூஹம் என்று தனிபானுல் அதன் இலக்கணம் யா தோ தெரியவில்லை. இதிருக்கட்டும். இனி நமது ஸத்யமூர்த்தி யை பாருங்கள்.

அவர் தனது பிரஸங்கத்திலும் பழையபாடத்தைத் தான் படிக்கிறுர். அவர் கூற்று இது. ஒடுக்கப்பட்டவர் நிலைமை இம் மாகாணத்தில் நம்முடைய மனப்பூர்ண ஆதாரவையும் அனுதாபத் தையும் எதிர்பார்த்து நிற்கும் இறுபான்மை வகுப்பொன்றுளது என்று ஆரம்பித்து அவர்கள் படும் கஷ்டம் அதிகம். மகாத்மா காந்தி காங்கிரஸ் தலைமை வகிக்க முன் வந்தகாலம் துடங்கித்தீண் டாமை அகற்றுவதே காங்கிரஸ் வேலை திட்டத்தில் பிரதானமாய் இருந்து வருகிறதென்றுர்.

இதைச்சற்று கவனிப்பாம். லோகோத்தரமான ஓர் கார் யத்தை ஒரு தீரன் செய்யவாரம்பித்து அவன் போய்விட்டால் அதை நடத்த முன் வருகிறவன் முந்தியவன் நோக்கத்தையனு சரித்தே கார்யம் செய்வான். அதுவே நம் சம்பிரதாயம். பாருங் கள் இக்ஷ்வாகு வம்சத்தில் கங்கையை பூலோகத்தில் தருவிப்ப தற்கு ஒரு அரசன் முயன்றுன். அக்கார்யம் அவனுல் முடிய வில்லை. அவனுக்குப் பின் வந்தவன் அன் நோக்கத்தை அனுச ரித்து ஆரம்பித்தான். அவனுலும் முடிவுபெறவில்லை. பிறகு பகீரதன் வந்து முடித்தான் என்று சரித்திரம் கேட்டிருக்கிறேம். அதுபோல் முதலில் சில மேதாவிகள் இந்தியாவிற்கு சில சௌ கர்யங்களைத் தேடவேண்டுமென்று காங்கிரஸ்மகாசபையை ஆரம் பித்தனர். ஆரம்பித்து காந்தி ஆதிக்யம் வரும்வரை நடத்தியவர்

கள் மிக மேதாவிகளென்றும் மிகப் பிரசித்திப் பெற்றவர்களென்றும் யாவரும் ஒப்புக்கொள்வார்கள். அவர்கள் ஒருவராவது காங்கிரஸ்ஸில் மதவிஷயத்தைப் புகவிடவே இல்லை. ஸ்ரீமான் பாலகங்காதர திலகர் மதவிஷயத்தை இதில் சேர்க்கவே கூடாது என்று வற்புத்தினர். இவ்விதமெல்லாம் நடந்தகாலத்தில் காங்கிரஸ் மகாஸபையில் யாவரும் மதிப்புவைத்தனர். இப்படி இருக்க இவர் காலத்தில் அவர்கள் போன்வழியை துறந்து அவர்களுக்கு விரோதமாயும் இந்த ஸபையில் இந்து மதத்தை குலைக்கும்படியான விஷயங்களையே முக்கிய நோக்கமாய் எடுத்துக் கொண்டதற்கு காரணம் யாது? இதனால் நம் கார்யம் கைகூடிவிடுமா உலகமெல்லாம் இதை நம்புமா. வைதிகர்களான எங்களை இந்த மேதாவிகள் பரிஹஸிப்பதுண்டு. அதாவது வைதிகர்கள் காரணமில்லாமல் அது தோஷம் இது பாவம் என்றுதான் கூறுவரே தவிர காரணம் விளக்கத் தெரியாத கிளிப்பிள்ளைகளென்பார்கள். உண்மையில் நாங்கள் அப்படிப்பட்டவர்களல்ல. சாஸ்திரத்தில் ஒவ்வொரு விஷயத்தையும் பூர்வபக்ஷம் பல யுக்திகளாற் செய்து பிறகு யுக்தியனுபவம் ஒட்டி சித்தாந்தம் கூறப்பட்டுத்தானிருக்கும். எம்மகரிஷியின் வசனத்தையும் ஸாமான்யமாய் நம்பிவிடமாட்டோம். இனி இவர்களுக்குத்தான் இந்தக்குணம் உண்டென்றுநிரூபிப்போம். ஸ்வராஜ்யத்திற்கு தீண்டாமையை ஒழிப்பது தான் முதற்காரணமா? அதில்லாமல் விருத்திக்காதா? அதைஒழிப்பதில்வேறுகெடுதல்கள்கிளம்பாதாவென்றுகேட்டால் யாரேனும் பதிற்கூற முன்வரட்டும் கிளிப்பிள்ளைபோல் காந்தியின் ஆக்ஞை என்பது ஒன்றுதான்கிடைக்கும் இனிஇதனால்நம் முன் ஏற்பட்டிருக்கும் மனக் கசப்பை கவனியுங்கள். இப்போது மகமதியர்கள் சிலர் காங்கிரஸ்ஸுக்குவிரோதமாய்கிளம்பியிருக்கின்றனர். அதன் காரணம் யாது. நான் இதைக் கூறுகின்றேன்.

காந்தியவர்கள் காங்கிரஸ்ஸை ஸ்வாதீனப்படுத்தியதற்குமுன் அச்சபையில் மத விஷயம் வரவில்லை. இவர்கள் காலத்தில் நுழைந்தது. இந்துக்களுக்கு மதப்பிடிப்பென்பதில்லாமற் போய்விடவே காங்கிரஸ்ஸில் வரம்பில்லாமல் இந்துமதவிஷயத்தை புகுத்திதங்களிஷ்டப்படி ஸனாதன தர்மிகளை ஹிம்ஸைக்குள்ளாக்கியாவது அவர்கள் மதத்தை விடும்படி செய்யவேண்டுமென்று ராஜாங்கசபையில் சட்டமாக்க முயன்றதில் மகம்மதியர்கள் எப்போதும் மத

விஷயத்தில் ஜாக்கிரதையுள்ளவர்களாதலால் வியவஸ்தையில்லாத இந்துக்களுடன் சேரக் கூடாதென்று முஸ்லீம் காங்கிரஸ் என்று தனிக்கூட்டமாய் ஆரம்பித்தனர். வர வர அது தடித்துவிட்டது எந்தப்பக்கத்திலிருந்து தீங்குவருகிறதென்று அறியாமல் பற்றி எறிய ஆரம்பித்தபிறகு அங்குபோய் ஸமாதானம் செய்துவிட்டு இந்து முஸ்லீம் ஒற்றுமை இனி வந்துவிடுமென்றும் மகாபுருஷர் நினைத்துவிடுகிறார்கள். கொஞ்சம் சென்று இன்னொரு பக்கம் பற்றுகிறது. இது முற்றிலும் அற்றுப்போகவேண்டுமானால் தீ எங்கிருந்து பாவுகிறதென்று கண்டு அந்த மூலத்தை அகற்ற புத்திமான் வழி தேடுவான். அது வரையிலும் என்ன சமாதானம் செய்தாலும் ஒற்றுமை ஏற்படாது.

இருக்கட்டும் இவர்கள் நாளைக்கு வாங்கிவரும் ஸ்வராஜ்யத்தில் மெஜாரிடி ஸபைக் காரர்கள்தான் சுகமடைவார்களா. மற்றவர்களு மடையவேண்டுமானால் அந்தஸபையில் சேர்ந்தால்தான் அனுபவிக்கலாமோ. மைனாரிடியார்களும் தங்கள் தங்கள் ஸ்வதந்திரத்தை இஷ்டப்படி அனுபவிப்பது தான் முதலான கொள்கை என்றால் ஸனாதன தர்மிகளுக்கு மட்டும் அதுவிலக்கோ. ஸனாதனதர்மிகள் முரண்டுவாதம் செய்கிறார்கள். அவர்கள் அதை விட்டுக்கொடுத்து எங்களுடன் ஒத்துழைத்தால் 'அவர்களும் அனுபவிக்கலாமென்றால் நாங்கள் செய்வது முரண்டுவாதம் என்று மத்தியஸ்த ஸபையில் தீர்மானமாய் விட்டதோ. நாங்கள் எதை விட்டுக்கொடுப்பது அவர்கள் எங்களுடன் எந்த விஷயத்தில் ஒத்துக்கொடுப்பார்கள். பெரியஸபையார்சொல்கிறபடிதான் கேட்கவேண்டுமென்றால் அப்போது ஸனாதன தர்மிகளென்று தனியாய் ஓர் பிரிவு இருக்க முடியுமோ· அப்படியிருக்கும் கோஷ்டியை ஸ்வராஜ்யம் வாங்கி வந்தவுடன் பலி கொடுத்துவிடுகிறதா. ஏதோ மைனாரிடியாரை எல்லாம் உத்தேசித்து கண்ணீரும் கண்ணுமாய் கருணை செலுத்துகிற அவர்கள் இந்த மைனாரிடியையகற்றி எங்கேயாவது எப்போதாவது பேசியதுண்டா.

இந்தியர்களது இஷ்டத்தை தெரிவிக்கக் கூடியது இந்திய தேசீய காங்கிரஸ் மகாஸபைதான் என்றறிந்தே இனி நடக்கப் போகும். லண்டன் சர்வகக்ஷி மகாநாட்டு விவாதத்தில் இந்தக் காங்கிரஸ் மகாஸபை பிரதிநிதியாய் இருக்கவேண்டுமென்று கவர்

ண்மெண்டார் காங்கிரஸ்ஸை அழைத்திருக்கின்றனர் என்று சத்ய மூர்த்தி கூறுகின்றார். நம் இஷ்டப்படி ஸ்வாராஜ்யம் கொடுத்து தான் ஆகுமென்றும் அதை தடுக்க எவராலும் ஆகாதென்கிறார். இது உண்மை. ஸ்வயராஜ்யத்தைப் பெற்றுக்கொண்டு வந்தபிறகு தமதிஷ்டத்திற்கு முரண்படுகிறவர்களை பயபயத்தால் சரிப்படுத்து வோமென்ற அபிப்பிராயமோ யாதோ.

எவ்விதமிருந்தாலும் சரி இன்றுவரை நான் ஸனாதனதர்மீ என்று சொல்லிக்கொள்ளுகிறவன் நாளையதினம் மெஜாரிடிசபை யாரின் ஆடம்பரத்திற்கஞ்சி அவர்களோடு சேர்ந்துவிட்டாலும் கடைசியாய் 10-பெயராவது வேதசாஸ்திரங்களையும் அனுஷ்டித்த மான ஆசாரங்களையும் விடமாட்டோம். லோகக்ஷேமம் இதனால் தான் வரும் என்று தீரத்துடன் எதிர்க்கத் தயாராய் நிற்பார்கள். அவர்களை மெஜாரிடியார் ரக்ஷிப்பார்களா, சிக்ஷிப்பார்களா, பக்ஷிப் பார்களா என்று ஆசங்கை நிகழலாம். மூன்றும் தைவத்தை நம்பாமல் பௌருஷத்தையே கொண்டிருக்கிற இவர்களால் முடி யாதென்பதும் கடைசியாய் यतो धर्मः ततो जयः எங்கு தர்மமோ அங்குதான் ஜயம் என்று ஸ்ரீகிருஷ்ணபகவானின் வாக்யமும் எங் களுக்கு அபயதானம் செய்கிறது. சுபம்

எம். என். சுப்ரமண்யசாஸ்திரிகள்

---

# ஸம்ஸ்கிருத பாஷையின் அவசியம்.

ஸம்ஸ்கிருதபாஷாஞானம் ஒவ்வொரு ஹிந்துவுக்கும் முக்கிய மானது. மத ஸம்பந்தமான விஷயங்களில் ஸம்ஸ்கிருதம் விலக் கக்கூடாததாக நான் அபிப்பிராயப்படுகிறேன். மொழிபெயர்ப்பு கள் எவ்வளவு சரியானதாக இருந்தாலும் அவைகள் மூலமந்தி ரங்களால் அளிக்கப்படும் உணர்ச்சியையும் சக்தியையும் தரக்கூடி யனவல்ல. மேலும் பல நூற்றாண்டுகளாக ஸம்ஸ்கிருதத்திலேயே சொல்லப்பட்டுவந்த மந்திரங்களை வேறுபாஷைகளால் உச்சரிப் பதால் மந்திரங்களின் இயற்கைசக்தி குறைவுபடும். ஒவ்வொரு

மந்திரமும் தவறின்றி உச்சரிக்கப்பட்டு, எல்லா ஸம்ஸ்காரங்களும் சரியாக அனுஷ்டிக்கப்படவேண்டும். ஸம்ஸ்காரங்களை அனுஷ்டிப்பவருக்கும் அதில் கலந்துகொள்பவர்களுக்குமே அவைகளின் பொருள் தாத்பர்யங்கள் இவைகளை விளக்கவேண்டும். ஸம்ஸ்கிருதம் போதிக்கப்படாத ஹிந்துவின் படிப்புமுறை பூர்த்தியானதாக கருதப்படமுடியாது. ஸம்ஸ்கிருத அப்பியாஸம் இல்லாவிடில் ஹிந்து வாழ்க்கையின் தத்வத்திற்கே பொருள் இல்லையென்று கூறலாம். எனவே ஸம்ஸ்கிருத பாஷையில் திறமையுள்ள மாணவர்களை உற்பத்தி செய்யவேண்டும். தற்கால போதனை முறைப்படி ஸம்ஸ்கிருதம் கஷ்டமான பாஷையாக கருதப்படுகிறது. ஆனால் உண்மையில் ஸம்ஸ்கிருதம் எளிதில் அப்பியசிக்கக்கூடியதாகும். ஸம்ஸ்கிருதம் கஷ்டமானதென்று வைத்துக்கொண்டாலும் மதக்கட்டளைகளை ஆசரிப்பது இன்னும் கஷ்டமானதாகவே இருக்கிறது. ஹிந்துக்கள் மதக்கட்டளைகளை ஆசரிக்கவேண்டியது முக்கியமாதலின், எவ்வளவு கஷ்டப்பட்டாலும் மதத்தின் ஸ்வரூபத்தைத் தெரிந்துகொள்ள ஸம்ஸ்கிருதம் அவசியமாக இருத்தலால் ஸம்ஸ்கிருதத்தை அப்பியசிக்கவேண் வேண்டியது ஹிந்துக்களின் கடமையாக இருந்துவருகிறது. ஆகையால் வருங்காலத்தில் உலகின் வழிகாட்டிகளாய் ஆகப்போகிற தற்காலத்திய யுவர்கள் ஸம்ஸ்கிருதபடிப்பை அப்பியசிக்க முற்படவேண்டியது மிகவும் அவசியமானதாகும்.

பாரதீ புத்திரன்.

---

# வாரவிருத்தாந்தம்

பக்தியா த்வேஷமா:—மதுரைக்கோயிலிலிருந்த ஓர் விநாயகர் விக்ரஹம் ஓர் தர்மகர்த்தாவால் அருகிலுள்ள ஓர் ஊர் ஆலயத்திற்கு அளித்ததாக முன்னறிவித்தோம். ஓர் பக்தர் அந்த விநாயகரை கோர்ட்டுமுன் கொண்டுவந்து நிறுத்தவேண்டும் என வழக்குத்தொடர அப்படிசெய்யும்படி உத்தரவாயிருக்கிறது.

சில விஷயங்களுக்காக கோர்ட்டுமுன் தாங்கள் போகாமல் அவச்யமிருந்தால் கோர்ட்டு தன் வீட்டிற்கு வரும்படி சிலர் செய்வதைப் பார்க்கிறோம். இந்த பக்தர் ச்ரத்தையுள்ள பக்தாயின் விநாயக விக்ரஹத்தைக் கோர்ட்டுமுன் கொண்டுவரும்படி எக்காரணத்தைக்கொண்டும் சொல்லலாகாது. அவச்யமிருந்தால் ஆலயத்தினருகே கோர்ட்டைக்கொண்டுபோயிருக்கவேண்டும்.

பரிமுதல் செய்வாராம்:—தீண்டாதாரை உள்ளேவிடாத கோவில்களை ஸ்வராஜ்ய கவர்ன்மெண்டில் என்னசெய்வீர் என ஸ்ரீ காந்தியை ஒருவர் கேட்டார். ஜவரிலால் நேரு சொன்னதை யானும் உறுதிப்படுத்துகிறேனெனக்கூறி அச்சகையகோவில்களை ஸ்வராஜ்யம் வந்தால் பரிமுதல் செய்வோம் என்றார். இதைவிட இன்னும் மேலானகார்யங்களைச்செய்வார். தற்காலத்தலைவர் மதாபிமானிகள் விழித்தெழுந்து இப்ரவாஹத்தைத் தடுக்க முயலவேண்டும். ஊர் ஊராக ஆஸ்திகஸபை தோன்றவேண்டும். இந்த கோரச்செயலைக் கண்டித்து பத்திரிகைகளுக்கு எழுதவேண்டும். புது அரசாங்கம் மதத்தில் தலையிடாதபடி இப்போதே சட்டம்செய்ய முயலவேண்டும்,

மனதைத் திருப்பு:—பகைமையை அகற்ற கீத்என்பார் எல்லா ஓர் ஜாதியும் ஏகஜாதியாகவேண்டுமென்றார். தேக தத்வசாஸ்திரத்தில் நிபுணரான எலியட்என்ற ஓர் ஆங்கிலவித்வான் கீத்சொன்னமுறை சாஸ்திரத்திற்கேற்றதல்ல நல்லுபதேசத்தால் மனதைத் திருப்புவதே நல்வழி என்கிறார். நாகரீகர் இதைக்கவனித்து நம் தர்மவழியைக் கடைப்பிடிப்பாரா?

நின்றுகொல்லும் தெய்வம்:—தென்னார்காடு ஜில்லாவில் தர்மகர்த்தா ஸ்வாமிகாசுமாலையை அடகுவைத்துபணத்தைச்சொந்த உபயோகத்திற்கு எடுத்துக்கொண்டாராம். மற்றொருவர் விக்ரஹத்தை விற்றாராம். அஸுராம்சமுள்ள இவர்கள் களவுக்குற்றபடி அரசாங்க சிக்ஷைபெறுவது நியாயம். இல்லையேல் தற்சமயம் சிக்ஷைபெறாவிடினும் சித்ரகுப்தன்முன்னே எட்டு ஸாக்ஷிகள் எதிரே இதற்கு பதில்கூறி சிக்ஷைபெறுவது திண்ணம். இந்த பாபம் அவர் ஸந்ததியையும்பாதிக்கும்.

தைவஸான்னித்யம்:—எங்கும் எல்லாமாயிருந்தாலும் எம்பிரான் ஆலயத்தில் அர்ச்சாவதாரமாயுள்ளதை ஆஸ்திகர் அறிவர். ச்ரத்தையும் பக்தியும் பூஜையுமுள்ளவிடத்தே அவரது சான்னித்யம் அதிகமென்பர். பூரிஜகன்னாதத்திலே ஸ்ரீ கிருஷ்ணனது உடல் சிதைந்து சிந்தியதாதலின் மரத்தால் விக்ரஹம் செய்து வைக்கப்படுகிறது, அதற்கு மாலின்யம் வருங்காலத்தில் அர்ச்சகர்கள் ஆஹாரமின்றி பகவத்யானம் செய்வார்களாம். ஸ்வப்னத்தில் இங்குள்ள மரத்தைக்கொண்டுவாவெனக்கூறுவாராம் பகவான். அதை நாகங்கள் சூழ்ந்திருக்குமாம். பின்னர்துதித்து அதை எழுப்பி அந்த மரத்தைககொண்டு தக்ஷன்செதுக்கும் ஓசை ஒருவர் காதிலும் படாமல் வாத்யகோஷமும் பஜனையும் செய்வார்கள், இது அடுத்தவாரம் நடக்கப்போகிறது. லக்ஷக் கணக்கான பக்தர்கள் கூடுவர்.

பெற்றோருக்கோர் வேண்டுகோள்:—ஆங்கில கலாசாலைகள் நமது ஆசாரத்தை அழித்து நவ நாகரீகப் பயிரை விருத்திசெய்யும் நாத்தங்கால் என்பது தெரிந்ததே' ஆங்குள்ள போஜன சாலைகளில் நடக்கும் அட்டூழியங்களை பலர் அறியார் சில விடங்களில் மாம்ஸாஹாரம் சாகாஹாரம் என்றே இரண்டே பிரிவுகளிருக்கின்றன, இதில் எதில் வேண்டுமானாலும் சேர மாணவர்களுக்கு சுதந்தரமுண்டு. சாகாஹாரத்தில் பழக்கப்பட்ட பல அப்ராம்மண சிறுவர்களுடன் ஸமபந்தியாக 'புஜிக்கநேருகிறது. மற்றவர்கள் பரிஹஸிப்பர் என்ற பயத்தால் நம் குழந்தைகள் பரிஷேசனம் ப்ராணுக்னி ஹோத்ரம் முதலியவைகளைச் செய்வதில்லை, இந்த அதர்மச் செயலுக்குநாம் உதவிசெய்யலாகாது. சிறு வயதில் பெற்றோரது ஆளுகையில்லா மாணவர் பல வகையிலும் கெடுக்கின்றனர். ஸ்கூல் போஜனசாலை செலவில் ஓர் குடும்பத்தைவைத்து வியாதியுந்துர்குணமும் வராமல் செய்யலாம்.

வே. ஸோமதேவ சர்மா.